நடத்தப்பட்டு வரும் இந்த வேளையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற இராஜகோபுரத்திற்கு, அந்தக் கோயிலினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், உபயதாரர்கள் முன்வருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழிவகை செய்வார்களானால், அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

208—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

6962*—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மானியக் கோரிக்கை எண் 41 மற்றும் 51–ன்மீது நடைபெற்ற விவாதத்திற்கான பதிலுரையில் சட்டமன்றப் பேரவையில் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதினுடைய அடிப்படையில், நாகப்பட்டினம்

2013 ஏப்ரல் 10]

மாவட்டம், சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன்கோவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து கருத்துரு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்திசையும் புகழ் மணக்க தன்னை மெய் வருத்தி உழைக்கும் தமிழகத்தின் தவப் பலனாய், எத்தரும், வித்தரும் ஏவிய சதிகளை மதிகொண்டு சாய்த்து, சத்திய சோதனைகளை வென்று, சரித்திரம் படைத்த சாதனைத் தாய் கண்டெடுத்த அம்மா திட்டம் என்ற அற்புதத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்குத் தந்து, அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் அறிவு, அம்மா என்றால் துணிவு, அம்மா என்றால் பாசம், அம்மா என்றால் பரிவு என்ற கோட்பாட்டோடு தன்னுடைய பேருழைப்பால், தாய் நாட்டில் தமிழகத்தைத் தலை நாடாய் செய்வதற்கு, உண்ணாது உறங்காது விழித்து உழைக்கும், இந்த மண்ணாளும் மாதரசி, மாதர்குல மாணிக்கமே! அம்மா, உங்களுடைய புனித மலர்ப் பாதங்களை வணங்கி, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் இந்தப் பகுதி மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருந்தது. இன்றைக்கு நாங்கள் கேள்வியைக் கேட்டு, பதில் அளிப்பதற்கு முன்பே கட்டடத்தைக் கட்டித் தர முன்வந்திருக்கின்ற, நான் அனுதினமும் வணங்குகின்ற கடவுள், என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.